www.padippakam.com

# புதிய தடம்


கலை இலக்கிய இதழ்

3

ஜனவரி 1999





சரஸ்வதி வந்தனம்


தனிச் சுற்றுக்கு நன்கொடை ரூ.8.00


படிப்பகம்

www.padippakam.com



# தேசியகீதம்

சினிமா என்ற பெயரில் பாலியல் உணர்வுகளைத் தூண்டும் ஆபாசக் காட்சிகளை படம் பிடித்து பணம் பண்ணும் இன்றைய இயக்குனர்கள் மத்தியில் சேரன் வித்தியாசமானவர்!.

தொடர்ந்து சில இலட்சியங்களுடன் படம் எடுத்து வருகிறார். (பாரதி கண்ணம்மா பொற்காலம் தேசியகீதம்) மக்களிடம் சில கருத்துக்களை ஒவ்வொரு படத்திலும் சொல்கிறார். சினிமா என்பது பொழுதுபோக்கிற்கின்றில்லாமல் மக்கள் நலனுக்கானது என்று புரிந்து செயல் படுகிறார். இது நாள் வரையிலான சேரனின் இந்த நிலைபாடு பாராட்டப் பட வேண்டியதாகும் என்று எல்லோரையும் போல் நாம் நிறுத்திக் கொள்ள முடியாது. அவ்வாறு செய்வது விமர்சனமும் ஆகாது.

அவர் மக்களுக்குச் சொல்லவரும் கருத்து எப்படிப் பட்டதென்று பார்க்க வேண்டியுள்ளது. தேசிய கீதத்தில் அனைத்துவித அவலங்களும் நிறைந்த ஓர் சராசரி தமிழக கிராமத்தை களமாக எடுத்துக் கொண்டு அந்த அவலங்களுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்று சிந்திக்கும் நான்கு இளைஞர்களையும் இரு முதியவர்களையும் (தியாகிகள்) கதாபாத்திரங்களாக நம் முன் கொண்டுவந்து இயங்க விடுகிறார்.

இவர்கள் பலவிதமாகச் சிந்தித்து இறுதியில் ஒரு முடிவுக்கு வந்து செயல்படத் துவங்குகிறார்கள். அவர்கள் வந்தடையும் முடிவு " மக்களது கஷ்டங்களைப் புரிந்த ஒருவன் நாட்டின் முதலமைச்சராக வராதவரை நமது கஷ்டங்கள் தீராது" என்பதாகும்.

மக்களது துயரங்களைப் புரிந்த கக்கனும் காமராஜரும் செத்துப்போய் விட்டதனாலும் தமிழகத்தில் இனி அப்படியொருவனை இனி படைப்பதில்லை என பிரம்மன் முடிவு செய்து தொலைத்து விட்டதன் காரணமாகவும், மக்கள் படும் சிரமங்களைப் புரிந்த ஜோதிபாசுவுக்கும் E.K. நாயனாருக்கும் பாவம் தமிழ் தெரியாது என்ற காரணத்தினாலும் வேறு வழியேயின்றி, பரம்பரைப் பணக்காரக் குடும்பத்தில் பிறந்து வளர்ந்து ஆட்சியிலிருக்கும் தற்போதைய முதல்வரை (நாசரை) குடும்பத்துடன் கடத்தி அவர்களுக்கு மக்கள் படும் துயரங்களைப் புரிய வைத்து விடுவது என்ற முடிவுக்கு வருகிறார்கள்.

ஆமாம் இவ்வளவு சுலபமாக இந்நாட்டுப்பிரச்சனைக்கு தீர்வு காண வழியிருந்தும் அது புரியாமல் புலம்பும் அரசியல்வாதிகளது மரமண்டையில் சேரனைக் கொண்டு ஆளுக்கொரு கொட்டுவிட்டாலென்ன ?.

படிப்பகம்

பிறருக்கான மக்கள் நலன்களை, மக்கள் துயர் துடைக்க துடிப்பவர்களைத் தேடி அவர்கள் [illegible] கட்சிகளை வளர்த்து பின் தேர்தலில் போட்டியிட்டு பணத்தையும் சாராயத்தையும் தண்ணீராய்ச் செலவழித்து ஒட்டு வாங்கி ஜெயித்தும் மெஜாரிட்டியை நிரூபிக்க முடியாமல் போகும் போது கூட்டனியமைத்து நித்திய கண்டம் அல்பாயுசுமாக இருந்து இந்த பாழாய்ப் போன சனங்களுக்கு சேவை செய்வதற்குப் பதிலாக எப்படியோ ஜெயித்து வந்து ஏற்கனவே பதவியிலிருக்கும் ஒரு தலைவனின் மனதை மாற்றுவது சுலபமல்லவா ?

www.padippakam.com

இந்தத் தந்திரத்தால் சேரன் புதுமைப்பித்தன் இயக்குனர் ஜீவாவையும் வென்று விடுகிறார்.

சரி கதைக்கு வருவோம். தாங்கள் நினைத்தபடியே அந்த 4 : 2 என்ற விகிதத்திலான இளைஞர்களும் முதியவர்களும் முதல்வரின் குடும்பத்தினரைக் கடத்தி மனதை மாற்றி விடுகிறார்கள். இந்த மனமாற்றப் போராட்டத்தில் ஒரு முதியவரையும் (நாகேஷ்) இழந்துவிடுகிறார்கள்.

இறுதியில் மனம் மாறிய முதல்வரை மீண்டும் அவரது நாற்காலிக்கு அதாவது அந்த "அலாவுதீனின் அற்புத விளக்கு போன்ற" பதவி நாற்காலிக்கு அழைத்துச் செல்லும் போது அந்த நாற்காலியின் மகிமை தெரிந்த பேராசை பிடித்த ஒரு மந்திரவாதி மன்னிக்கவும் ஒரு மந்திரி மனம் மாறிய சுட்டுக் கொல்ல முயல்கிறார்.

ஆனால் அந்த நான்கு இளைஞர்களும் துப்பாக்கிக் குண்டுகளை தடுத்து தங்களது உடலில் ஏற்று முதல்வரைக் காப்பாற்றி உயிர் விடுகின்றனர். இவர்களது இந்தத்தியாகத்திற்கு தேசிய கீதம் என்று சேரன் பெயரிட்டுள்ளார். இந்தச் சிறுபிள்ளைத் தனமான கதை பற்றி நாம் அலட்டிக் கொள்ள வேண்டியதில்லை தான். மேலும் சேரனின் வர்க்க உளவியல் பற்றியும் காந்தீய மனமாற்ற சிந்தனைக்கு பலியாகிப் போன அறிவுஜீவியாக அவர் உள்ளார் என்பது பற்றியும் நாம் அறிந்ததும் ஏற்கனவே விளக்கிக் கூறியதுமாகும் (மே 97 பகிர்வு , டிச 97 பகிர்வு)

ஆனால் இப்படத்தில் துறுத்திக் கொண்டு தெரியும் ஓர் விஷயம் பற்றி மட்டும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். இப்படத்தில் வரும் தியாகிகளில் ஒருவர் (நாகேஷ்) தீவிரவாதிகள் பற்றி கூறுவதும் மேலும் இப்படம் முழுவதும் பார்வையாளர்களுக்கு பதிய வைக்கப்படுவதுமான அகிம்சாவாதமும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

புதிய தடம்

படிப்பகம்

www.padippakam.com

வேலை கிடைக்காமல் விரக்தியுற்ற இளைஞர்கள் தீவிரவாதிகளாக (போராளிகளாக) மாறுவதாக தியாகி (சேரன்) கூறுகிறார். இக் கருத்து பரவலாக தரகு முதலாளித்துவ பத்திரிக்கைகளும் திரிபுவாதக்கட்சிகளும் தொடர்ந்து பரப்பி வரும் பிரச்சாரமாகும்.

இந்த நாட்டில் அரசு வேலைகளில் அமர்வதைக் கவுரமானதாகக் கருதி அதற்காகக் கோரிக்கை வைத்துப் போராடும் கொள்கையுடையோர்க்கு அதாவது நிலவும் இந்தச் சமூக அமைப்பிற்குள்ளாகவே செட்டில் ஆகி விடும் விருப்பம் கொண்ட நடுத்தர வர்க்க அறிவுஜீவிகளுக்கு வேண்டுமானால் தாங்கள் எதிர்பார்க்கும் வேலை கிடைக்காமல் போகும் போது விரக்தி ஏற்பட்டு மன நோயாளிகளாக மாறவும் கஞ்சாக் குடிக்கும் ஹிப்பிகளாக மாறவும் வாய்ப்புண்டு. இவர்கள் சமூகமாற்றத்திற்காகப் போராடும் போராளிகளாக சேரனின் வார்த்தையில் தீவிரவாதிகளாக மாற முடியாது. இச்சமூக அமைப்பிற்குள்ளாகவே நலன் பெறவும் போலிக் கவுரவம் பெறவும் ஊக்குவிக்கும் திரிபுவாதக் கட்சியால் வளர்க்கப் படுபவர்களே அது கிடைக்காதபோது விரக்தி ஏற்பட்டு மனநோயாளி களாகவோ அல்லது சமூக விரோதிகளாகவோ மாறுகிறார்கள்.

இதை மறுத்து சேரன் இந்தத்திரிபுவாதிகள் எடுத்த வாந்தியை தானும் தின்று தேசிய கீதத்தில் மீண்டும் கக்குகிறார்.

சமூக மாற்றத்திற்கானது ஆயுதப் போராட்டமா அல்லது பாராளுமன்ற வழிமுறையா என்பது அதை மேற்கொள்பவர்களது அரசியல் புரிதல், நிலைபாடு, வர்க்கத்தன்மை ஆகியவை தொடர்புடையது. எது சரி என்று சமூக அக்கறை கொண்டவர்கள் விவாதிக்கலாம். ஆனால் ஆளும் வர்க்கத்தினர் மற்றும் அவர்களது ஏஜெண்டுகள் இதனை அரசியல் பிரச்சனையாகக் கருதாமல் கிரிமினல் நடவடிக்கையாக அதாவது விரக்தியுற்றவர்களது சமூக விரோதச் செயலாக சித்தரிக்கின்றனர்.

இப்போது கூறுங்கள் சேரன் யார் ?

படிப்பகம்

www.padippakam.com

# புரட்சியும் புத்திமான்களும்

அவர்கள் புத்திமான்கள்
உறுதியளிக்கப்பட்ட புரட்சி வருமென அறிவார்கள்
புரட்சி அழகானதெனவும் புனிதமானதெனவும்
புதிய உலகொன்றை அமைக்குமெனவும்
அவர்கள் அறிவார்கள்

புரட்சி கொடுமைகளை எவ்வாறு சாய்க்குமெனவும்
புரட்சியை எவர் செய்வாரெனவும்
புரட்சி எப்பொழுது நிகழுமெனவும்
அவர்கள் அறிவார்கள்.

புரட்சி வந்த பின்பு
எவரெவர் என்ன செய்யலாமெனவும்
அவர்களே அறிவார்கள்.

புண்களிற் சீழ் வடியக்
குருதி படிந்த மேனியுடன்
ஆடைகள் அழுக்கேறி நாறக்
கைகளிற் கொலைக் கருவிகளுடன்
புரட்சி வந்தது.
புரட்சி இதுவல்லவென்று
புத்திமான்கள்
அழுத்தம் திருத்தமாக ஆதாரங்களுடன் வாதிட்டனர்

ஆயினும் உலகம் மாறியது.

சி.சிவசேகரம்.

'போரின் முகங்கள்' கவிதைத் தொகுப்பிலிருந்து...

படிப்பகம்

www.padippakam.com


கவிதை

கல்வி

எம்.சேகரன்.

மதுப் புட்டிகளை பெயர் படித்து வாங்கவும்
விளம்பரங்களில் அந்நிய தேசப் பொருட்களை
மனப்பாடம் செய்யவும் கற்றுக் கொண்டோம்.

அரசியல்வாதிகளின் அன்றாடப் புலம்பல்களை
பத்திரிக்கையில் படித்து புளகாங்கிதம் அடைந்தோம்.
வங்கிக்கடன்களுக்காக அடிமைச்சாசனத்தில்
கையெழுத்திடப் பயின்றோம்.

வேட்பாள மாயாவிகளின் வேண்டுகோள்களை
தட்டிப் போர்டுகளில் சரியாய் வரையத் தெரிந்தோம்.
செல்லும் வாக்குகளை நேர்த்தியாய் அளித்துச்
செல்லாக் காசாகிப் போனோம்.

எழுத்து வரி வடிவங்களை மட்டும் எமது
மூளைக்குள் புகுத்திக் கொண்டு
ஆடும் பொம்மைகளானோம்.

சிந்தனைகளில் முட்கிரீடம் சூட்டப்பட்டதின்
வலியறிய மறந்தோம்.
புதிய சிலுவைகளில் அறையப் படும் வரை
புன்னகைத்துக் கொண்டிருக்கிறோம்
ஏதுமறியாமலே.

●

கவிதை

மேகவண்ணன்.

வேஷம்

சீழ் புரையோடியதோர் உடலின்
வெள்ளுடை அலங்காரம் போல்
முகஞ் சுழிக்க வைக்கிறது
சமத்துவபுரங்கள்.

படிப்பகம்

www.padippakam.com

# கொலை செய்யும் சக்திமான்கள்.

பெருவாரியான மக்களால் நுகரப்படும் அனைத்து தகவல் தொடர்புச் சாதனங்களின் வழியாகவும் ஏகாதிபத்தியமும், தரகு நிலப்பிரபுத்துவ சக்திகளும் சீரழிவு என்ற ஆலகால விஷத்தை புகட்டி வந்து கொண்டிருக்கின்றன.

மத்திய அரசின் தொலைக்காட்சி ஒளிபரப்பான தூரதர்ஷனில் செவ்வாய்க் கிழமை இரவு நேரங்களிலும், சனிக்கிழமை முற்பகலிலுமாக வாரம் இரு முறை ஒளிபரப்புச் செய்யப்படும் 'சக்திமான் ' என்ற பிரபலமான குழந்தைகளால் விரும்பிப் பார்க்கப்படுகிற ஒரு தொலைக்காட்சித் தொடர் ஏற்படுத்தும் பன்முகப் பரிமானங்களுடனுமான சீரழிவுகளைச் சொல்ல முயற்சிப்பதும் அதற்கெதிராகப் போராடுவதும் இப்போதைய அத்தியாவசியத் தேவைகள் என்று உணர்கிறோம்.

சக்திமான் தொடரின் மையக்கரு இதுதான். நாட்டில் ஆங்காங்கே நல்லவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் போதெல்லாம் சக்திமான் என்ற அபூர்வ மனிதர் வந்து பொது ஜனங்களை ரட்சித்து பிறகு கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விடுகிறார்.

ஒரு பத்திரிக்கை அலுவலகத்தில் வேலை செய்யும் குழுவிலுள்ள கங்காதர் என்கிற பாத்திரம் தான் சக்திமான் என்பது இத்தொடரில் சஸ்பென்ஸாகத் தொடர்கிற விஷயம்.

சக்திமான் தெய்வ விஞ்ஞான சக்தி படைத்தவர் என்றும் சமூக விரோதிகளிடமிருந்தும் பிற கிரகத்து ஜீவராசிகளின் தாக்குதல்களிலிருந்து பூமியையும் மக்களையும் குறிப்பாக குழந்தைகளையும் ரட்சிக்க வந்தவர் என்று சம்பவங்களை அடுக்குகிறார்கள்.

இந்நிலையில் வேற்று கிரத்து மனிதர்களும் பூமி மீது படையெடுக்கிறார்கள். அவர்களிடமிருந்து வரும் தாக்குதல்களிலிருந்து பூமியை சக்திமான் எப்படிக் காப்பாற்றப் போகிறார் என்று எல்லோரும் விழிகள் விரிய டி.வி திரைகளை வெறிக்க சக்திமானின் சூதாட்டம் தொடர்ந்து இந்தியாவெங்கும் பல்வேறு பிராந்திய மொழிகளில் அரங்கேறி வருகிறது.

துன்புறும் மக்களின் கதாநாயகனாக போராட வருகிற சக்திமானின் தோற்றம் கவனிக்கத் தக்கது. இவர் பிரபுத்துவக் கோட்பாடுகளில் ஒன்றான பஞ்சபூதங்ளின் உருவாக்கமாய் அதாவது நிலம் நீர் காற்று ஆகாயம் நெருப்பு ஆகியவற்றின் சேர்க்கையினாலும் ஒரு இந்துமதச் சாமியாரின் சக்தியினாலும் தோற்றுவிக்கப் படுவதாகவும் சக்திமானுக்கு சிக்கல்கள் ஏற்படும்போது இந்தச் சாமியாரை வணங்கி தம் பிரச்சனைகளுக்கு ஆலோசனைகளை சக்திமான் பெறுவதாகவும் இத்தொடர் சித்தரிக்கிறது.

படிப்பகம்

www.padippakam.com

விபத்துக்களில் சிக்கிக் கொள்ளும் குழந்தைகளை சக்திமான் உடனடியாக வந்து காப்பாற்றி விடுவது போன்ற காட்சி அமைப்புக்களினால் இத்தொடர் குழந்தைப் பார்வையாளர்களிடையே மிகுந்த வரவேற்புப் பெற்றுள்ளதை அறிகிறோம்.

மேலும் இத்தொடரை விளம்பரங்களின் வழியே வழங்கும் பார்லே-ஜி என்ற பிஸ்கட் தயாரிப்பு நிறுவனம் இத்தொடரின் பின்னனியில் தனது தரகு வியாபாரத்தின் பலனாக கோடி கோடியாகக் குவித்துக் கொண்டிருக்கிறது.

சமூகத்தின் இடிபாடுகளிலிருந்து நம்மை மீட்க ஒரு தேவ தூதன் வருவான் என்ற நிலப்பிரபுத்துவ அடிமைச் சிந்தனைப் போக்க மென்மேலும் வளர்த்து சமூக வளர்ச்சியில் மக்களது பங்கை பின்னுக்குத் தள்ளுகிற இந்திய ஆளும் வர்க்கத்தின் முயற்சிக்கு, தரகுத் தன்மையால் ஏகாதிபத்தியம் மென்று துப்பிய எச்சில் பார்முலாக்களைக் கொண்டு பிஸ்கட் தயாரிக்கும் நிறுவனம் விளக்குப் பிடிக்கிறது. மக்களால் மக்களுக்காக படைக்கப்படுகிற கலை இலக்கியமே சமூகத்தை வளர்த்துச் செல்லும் என்ற நமது சிந்தனைக்கு எதிராக அறிவியல் பார்வையற்ற, மூடத்தனமான ஒரு படைப்பாக்கத்தின் மூலமாக இந்த அரசும் தொலைக்காட்சி ஊடகமும் தொடர்ந்து மனித சமூகத்தின் மீது கலை இலக்கியங்ளின் வழியே தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கிறது.

தன் உடலில் தானே நெருப்பு வைத்துக் கொண்டு சக்திமான் காப்பாற்றுவார் என்று சொல்லிக் கருகிப் போகும் எண்ணற்ற சிறுவர்களின் மரணங்கள் செய்திகளாக நம்மை வந்தடைகின்றன. தானும் சக்திமானாகி விடலாம் என்று மாடி உச்சிகளில் நின்று சுழலும் சிறுவர்களின் சடலங்கள் மட்டுமே பூமிக்கு வந்து சேர்கின்றன.

அறிவியல் சிந்தனையற்ற சமூக விஞ்ஞானப் பார்வையற்ற இன்றைய கல்வித்திட்டங்களின் போதனைகள் மாணவர்களின் அடிப்படையான தேடுதலை முளையிலேயே கிள்ளி எறிகின்றன. மனப்பாடம் செய்யும் திறன் கொண்டவர்கள் மட்டுமே படிப்பாளிகள் என்று எண்ணப் படுகிறார்கள். இந்நிலையில் சக்திமான் பேன்ற கூத்தாடிகளின் பிம்பங்கள் சிறுவர்கறுக்கு ஆதர்சமான விஷயங்களாகி விடுகின்றன.

வெளிக் கிரகத்து மனிதர்களிடமிருந்து வரும் தாக்குதலை எதிர்கொள்வது என்பது ஒரு மிகையான கற்பனையில் விளைந்த கருத்தாக்கம் தான் எனினும் கூட இதே மையக் கருத்துடன் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது ஹாலிவுட்டில் தயாரித்து சில ஆண்டுகளுக்கு முன் வெளி வந்த "INDEPENDENCE DAY" திரைப்படத்தை சக்திமானுடன் ஒப்பிடலாம். "INDEPENDENCE DAY"-யில் மனிதர்களல்லாத ஜீவராசிகளைக் கொண்ட வேற்று கிரகத்தின் பிரமாண்டமான விண்கலம் ஒன்று பூமியில் அமெரிக்கக் கண்டப் பகுதியின் மேலே இருந்து கொண்டு தாக்குதல் தொடுக்கிறது. அமெரிக்க ஜனாதிபதி, ஒரு விஞ்ஞானி, ஒரு

படிப்பகம்

www.padippakam.com

ஒன்றினால் அயல்கிரக விண்கலத்தைத் தாக்கி அவர்களிடமிருந்து பூமியை மீட்பதாகக் கதை.

இதில் ஊடாடும் அரசியல் விஷயம் என்னவென்றால் பூமியிலிருந்து மட்டுமல்ல, பூமிக்கு வெளியிலிருந்தும் வரும் தாக்குதல்களிலிருந்தும் கூட போராடி மனித குலத்தைக் காக்கும் சக்தி அமெரிக்காவிடம் உண்டு. எனவே இரண்டாம், மூன்றாம் உலக நாடுகள் அமெரிக்காவின் பொருளாதாரச் சுரண்டலுக்கு கட்டுப் பட்டே தீர வேண்டும் என்று அமெரிக்க ஏகாதிபத்தியம் உலக நாடுகளுக்கு விடுத்த செல்லுலாய்டு எச்சரிக்கை தான் "INDEPENDENCE DAY".

அமெரிக்கா ஏகாதிபத்தியம் தங்களது உற்பத்திப் பொருட்களை விற்பதற்கான சந்தைகள்ாக இரண்டாம், மூன்றாம் உலக நாடுகளை வைத்துக் கொள்வதற்காக "INDEPENDENCE DAY" போன்ற பிரமிக்க வைக்கும் தொழில் நுட்ப, கிராபிக்ஸ் பூச்சுக்களுடன் படமாக்கியும் அதையும் காலனிகளுக்கு விற்பனை செய்வதன் வாயிலாக கோடி கோடியாக பொருளாதாரச் சுரண்டலில் ஈடுபடுகிறது.

எப்போதுமே எச்சிலை மட்டுமே விருந்தாக எண்ணி உண்கிற இந்திய ஆளும் வர்க்கத்தின் புத்திக்கு சக்திமானுக்கு அதிகமாக எந்தவொரு மானையும் யோசித்து விட முடியாது தான்.

இந்துத்துவக் கோட்பாடுகளையும், நெறிமுறைகளையும் புணரமைக்கப் பட்ட மனு நீதியையும் வலிந்து இந்திய சமூகத்தின் மீது திணிப்பதன் மூலமாக தமது இருப்பை நிலை நிறுத்திக் கொள்ள முடியுமென்கிற நிலவுடைமைச் சித்தாந்தங்களின் வேர்களைத் தகர்த்து எறியும் போது சக்திமான்கள் காணாமல் போவது உறுதி.

இந்திய நிலப்பிரபுத்துவம் நவீன அறிவியல் தொழல் நுட்ப வளர்ச்சிக்கேற்ப புதிய புதிய வடிவங்களில் தன்னைப் புணரமைத்துக் கொள்ள முயல்கிறது. இதில் நம்மால் அடையாளம் காணப்பட்ட சமீபத்திய முயற்சி தான் சக்திமான். இத்தகைய புணரமைப்பு வடிவங்களில் புத்தியிழந்து போய் இந்தியத் திரிபுவாதிகளான இடதுசாரிகள் வேண்டுமானால் இந்தியாவில் முதலாளியம் நிலவுகிறது. முதலாளித்துவ சனநாயகத்தினை அனுபவித்து வருகிறோம் என்று கூறி பிழைப்பு நடத்தலாம். ஆனால் சாராம்சத்தில் அடிப்படை மக்களுக்கெதிரான நிலப்பிரபுத்துவ வடிவங்களை வர்க்கச் சக்திகளிடமிருந்து மறைப்பது இயலாத காரியம்.

படிப்பகம்

 www.padippakam.com 

# கிரிக்கெட் - ஒரு சமூக விரோதச் செயற்பாடு சமூக மயமாகும் சனநாயக விரோதம்

விளையாட்டு என்பதும் மனித வாழ்வில் ஓர் அங்கமாகும். விளையாட்டே வாழ்க்கையாக இருக்க முடியாது. ஆனால் சிலருக்கு அவ்வாறு ஆகியுள்ளது.

இந்தியாவில் அனைத்து விளையாட்டு சாம்பியன்களும் விளையாட்டே வாழக்கையாக ஒரு குறிப்பிட்ட காலம் வரை வாழ்கிறார்கள்.

அதாவது ஜல்லிக்கட்டு காளைகள் போல பொலிகாளைகளைப் போல வளர்க்கப் படுகிறார்கள். அவர்களது உடலில் வலு இருக்கும் வரை அல்லது அவர்களை வளர்க்கும் நிறுவனங்கள் அவர்களுக்கு வலு இருப்பதாக நம்பும் வரை கட்டி வைத்து தீனி போடுகின்றன.

அவ்வாறு வளர்க்கப் படும் காலங்களில் அவர்கள் வேறு எவ்வித உழைப்பிலும் ஈடுபடவட வேண்டியதில்லை. வேலை பார்க்காமலே ஒரு குறிப்படிட்ட பதவி வகிக்கவும் அதற்குண்டான ஊதியம் மற்றும் பிற வசதிகள் பெறவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்படிப் பட்ட மிருகங்களை மன்னிக்கவும். வீரர்களை தங்களது நிறுவனங்களில் வைத்திருப்பதே பெருமைக்குரியதாக அரசு நிறுவனங்களுக்கும் கூடவே லாபகரமானதாக தனியார் நிறுவனங்கக்கும் இருக்கின்றது.

பெரும்பாலும் உலகம் முழுதும் இதே நிலைதான் முதலாளிய தேசிய வெறிக்கு பிற நாடுகளை அடிமை கொள்ளும் ஏகாதிபத்திய நடவடிக்கைக்கு உதவும் தேசிய பெருமை என்ற வகையில் இது போன்ற வல்லவர்களை அதிகமாக கொண்டிருப்பதும் வளர்ந்த நாடுகளுக்கு அவசியமாக உள்ளது.

வளர்ந்த நாடுகள் (எகாதிபத்தியங்கள்) பொருளாதாரத்தில் ஆயுத வலிமையில் தொழில் நுட்பத்தில் மட்டுமல்லாமல் நவின கலை இலக்கித்தில் விளையாட்டுத் துறையிலும் தாங்களே வலிமையானவர்கள் இத்தகைய வலிமை இல்லாதவர்கள் தங்களது அடிமைகளாக இருக்கத் தகுதியானவர்கள் என்று ஏழை மூன்றாம் உலக (காலனி, அரைக்காலனி)

படிப்பகம்

www.padippakam.com

நாட்டு மக்களது சிந்தனையில் தாக்குதல் தொடுக்கிறது.

ஆனால் இந்தியா கோன்ற அரைக்காலனிய நாடுகளும் இதே போன்ற பொலிகாளைகள் வளர்ப்பில் ஈடுபடுகின்றதே அது ஏன் ?.

ஒரு விளையாட்டு ஒரு நாட்டில் தோன்றி வளர்வது என்பதும் அந்நாட்டு பொருளாதார அரசியல் சமூக வளர்ச்சியுடன் இணைந்த ஒன்றே.

இன்று இந்தியாவில் வளர்க்கப்படும் விளையாட்டு கிரிக்கெட் மட்டுமே மற்ற விளையாட்டுக்கள் அனைத்தும் குறைந்த நிதி ஒதுக்கீடு நிர்வாக கோறாறு ஏமாற்று கவனக் குறைவு போன்றவைகளால் நெருக்கடிக்குள்ளாகித் தவிக்கின்றன. ஆனால் கிரிக்கெட் மட்டும் அரசால் மட்டுமல்லாமல் பிரதானமாக தனியார் நிறுவனங்களாலும் வளர்க்கப் படுகிறது.

இந்தியாவில் தொழில் நுட்பம் ஆயுதங்கள் கருவிகள் நுகர் பொருட்கள் நவீன கலை திரைப்படங்கள் இறக்குமதி செய்யப் பட்டு சமூக மயப்படுத்தப் பட்டதைப் போலவே கிரிக்கெட்டும் பிரிட்டிஷ. ஏகாதிபத்தியத்துடன் கூடவே இந்தியாவிற்குள் நுழைந்து இன்று வளர்ந்து சமூக மயமாகியுள்ளது.

இந்த கிரிக்கெட் பற்றி கவிஞர் இளவேனில் இப்படிக் கூறுவார். (25 வெண்மணித் தெரு) " பிரிட்டிஷ் பிரபு குலத்தார் அதிக நேரம் வெயிலில் உலாவும் பொருட்டு பந்தெடுத்துப் போட்டு பிடித்து விளையாடினர் ".

அதே கிரிக்கெட் இந்தியாவிற்குள் நுழைந்த போது இங்கிருந்த வசதி படைத்த ஜமீனதார்களும் அறிவுஜீவிகளுமி பிரிட்டிஷாருடன் இணைந்து அவர்களது மொழி மற்றுமீ பழக்க வழக்கங்களை சுவீகரித்துக் கொண்டு தரகுத் தொழலில் ஈடுபட்டு தங்களது பொருளாதாரத்தை வளர்த்துக் கொண்டதுடன் கிரிக்கெட்டையும் சுவீகரித்துக் கொண்டனர்.

இந்த கிரிக்கெட் நமது தட்ப வெட்ப நிலைக்கு எவ்விதத்திலும் உகந்ததில்லை. இது குளிர்ப் பிரதேசங்களில் பணக்காரர்கள் பொழுது போக்காக ஆடத்துவங்கியதால்தான் முழு ஆடையலங்காரங்களுடன் ஆடக் கூடியதாக உள்ளது. வேறு எந்த விளையாட்டிலும் பேண்ட் சர்ட்டுடன் ஆட முடியாது. ஆனால் கிரிக்கெட் மட்டும் பேண்ட் சர்ட்டுடன் உடல் முழுவதையும் பாதுகாப்பான்கள் மூலமாக மூடிக் கொண்டும் விளையாடுவதாக உள்ளது.

கால்பந்து கூடைப்பந்து அல்லது டென்னிஸ் போன்ற வேறு எந்த விளையாட்டுமே இது போல் முழு உடை அலங்காரங்களுடன் நாள் முழுவதும் நின்று விளையாட முடியாது. ஏனெனில் அவை அனைத்துமே

படிப்பகம்

www.padippakam.com

உண்மையில் விளையாட்டாகவே தோன்றி வளர்ந்து வந்துள்ளது. இவ்விளையாட்டுக்கள் மனித உடலை நலமாக வைத்திருப்பதற்கான உடற் பயிற்சியாகவும் உள்ளது. ஆனால் கிரிக்கெட் உழைப்பை மறுத்த பணக்கார சோம்பேறி பிரபுக்களின் சோம்பல் முறிப்பாகும்.

இன்று மக்களுக்கு விசோதமாகவும் மக்கள் விரோதிகளது நலனுக்கானதாகவும் பத்திரிக்கைகளும் சினிமா மற்றும் தொலைக்காட்சியும் விளங்குகினறன. ஏனென்றால் ஆளும் வர்க்கத்தினருக்கு சேவை செய்யும் "மாமா"க்களின் கைகளில் இவை சிக்கிக் கொண்டுள்ளன.

இக்கருவிகள் மக்களின் கைகளில் கிடைக்கும் போது அல்லது உண்மையான மக்கள் கலைஞர்களின் கைகளில் கிடைக்கும் போது அவை மக்கள் நலனுக்கான கருத்துக்களையும் பிரதிபலிப்பவையாக மாறுகின்றது.

ஆனால் "மதம் " என்ற நிறுவனம் மட்டும் இன்று மட்டுமல்ல நாளையும் கூட மக்களது நலனுக்கு எதிரானதாகவும் மக்கள் விரோத சக்திகளுக்கு சேவை செய்யக் கூடியதாகவுமே இருக்கும்.

ஏனெனில் அதன் நிறுவனமயம் முதல் வளர்ச்சி வரை அனைத்துமே பிற்போக்கு கருத்துமுரல்வாத அடிப்படையிலானதாகும். எனவேதான் மதம் தொடர்ந்து நிலவுவது மக்கள் நலனுக்கு எதிரானது என்றும் அதன் அழிவு அவசியம் என்றும் சமூக விஞ்ஞானம் கருதுகிறது.

அதைப் போலவே கிரிக்கெட்டும் அதன் துவக்கம் முதல் இன்று வரை மக்கள் நலனுக்கு எதிரானதாகவே உள்ளது. பிற விளையாட்டுக்கள் நாம் மேலே கூறியவாறு கலை இலக்கியம் சினிமா ஆகியவற்றைப் போல அதனை கையகப் படுத்தியுள்ள வர்க்கத்திற்கு ஏற்றவாறு செயலாற்றக் கூடியது மாறாக கிரிக்கெட் எப்போதுமே மக்களுக்கு விரோதமாகவே செயலாற்றுகிறது.

ஏனெனில் விளையாட்டு அல்லது உடற்பயிற்சி போன்றவை உற்பத்திக்கான உழைப்பில் ஈடுபட்டு (8மணி நேரம்) போக மீதியுள்ள நேரத்தில் செய்யப்பட வேண்டியதாகும். இது கிரிக்கெட் தவிர்த்த விற அனைத்து விளையாட்டிற்கும் பொருந்தும். ஆனால் கிரிக்கெட் அவ்வாறில்லை. குறைந்த பட்சம் 12 மணி நேரத்தை செலவிட வேண்டிய செயல்பாடாக அது உள்ளது. மேலும் ஒரு தொடர் மேட்ச் என்பது இது போல் தொடர்ந்து பல 12 மணி நேரங்களை விழுங்கக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு கிரிக்கெட் உள்ளதால் இதில் பங்கெடுப்படுப்பதும் அல்லது குறைந்த பட்சம் பார்வையாளராக இருந்து ரசிப்பதற்கும் கூட யாருக்கு சாத்தியம்?.

படிப்பகம்

www.padippakam.com

ஆனால் இன்று இந்த கிரிக்கெட் என்ற சமூக விரோதச் செயலை பணக்கார வீட்டுப்பிள்ளைகளின் அங்க அசைவு சேட்டைகளை தொலைக்காட்சிகள் நாள் முழுதும் ஒளிபரப்புசெய்வதும் அவை நடுத்தர வர்க்கத்து வீட்டு மூலை முடுக்குகளிலும் வலிய நுழைந்து சிறுவர் முதல் பெரியவர் வரை பால் வேறுபாடின்றி அனைவரின் சிந்தனையில் நுழைந்து ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கின்றது.

கிராமப்புற ஏழைகள் சொந்தமாக டி.வி வாங்க முடியாதவர்கள் வீட்டுக் குழந்தைகளாவது இச்சீரழிவிலிருந்து தப்புவார்கள் என்று பார்த்தால் பஞ்சாயத்து டி,விக்கள் அவர்களையும் குறிவைத்துத் தாக்குகின்றது.

அதன் பயனாகத்தான் இன்று ரோட்டோரங்களில் எங்கு பார்த்தாலும் சிறுவர்கள் கையில் கிடைக்கும் மூன்று குச்சிகளை ஊனறி தென்கை பனை மட்டைகளால் ரப்பர் பந்துகளை விளாசிக் கொண்டு திரிகிறார்கள்.

இந்த விளாசுதல்கள் வெறும் பந்துகளை மட்டும் எனறிருந்தால் பரவாயில்லை. கூடவே உழைக்கும் விருப்பத்தையும் தன்மானத்தையும் போராட்ட குணத்தையும் சனநாயக உணர்வையும் கூட்டு முயற்சியையும் சேர்த்து விளாசுகிறார்கள். எதிர்மறையில் போலித்தனபான பகட்டுகளையும் தரகுத்தனத்தையும் அடிமை மோகத்தையும் தனிநபர் துதிபாடல்களையும் சிக்கென பிடித்துக் கொள்கிறார்கள்.

ஏனென்றால் டி.வி கிரிக்கெட்டை மட்டும் ஒளிபரப்பவில்லை. ஒவ்வொரு பந்து வீச்சுக்கும் நடுவில் சமூக சீர்கேடுகளையும் சேர்த்து ஒளிபரப்புகிறது.

சாராயம் சிகரெட் பெண்களை மயக்குவதற்கான ஆண் வாசனைத் திரவியங்கள் சோப்புகள் ஆண்களை மயக்க பெண்களுக்கான சோப்பு முகப்பூச்சு எண்ணெய் மற்றும் ஜீன்ஸ் கோகோ-கோலா பெப்சி இன்னும் எத்தனையோ.

இவற்றை எல்லாம் சிபாரிசு செய்பவர்களாக சினிமா நடிகர் நடிகைகள் உலக அழகிகள் கிரிக்கெட் வீரர்கள்(!).

இவற்றைப் பார்க்கும் சிறுவர்கள் இளைஞர்கள் தங்களது யதார்த்த வாழவை மறந்து தங்களது ஹீரோக்களைப் போல முடியை வெட்டிக் கொண்டு மே ஜூன் மாதங்களின் கழுதை பொதி சுமக்க மறுக்கும் உச்சி வெயிலில் கனத்த ஜீன்ஸ் பேண்டுகளை மாட்டிக் கொண்டு பொட்டல்களில் உருண்டோடும் பந்துகளைத் துரத்தித் திரிகிறார்கள்.

இந்திய இளைஞர்களின் போராட்ட உணர்வை மழுங்கடிப்பதற்கும் சீரழிப்பதற்கும் போதை செக்ஸ் இசை சினிமா என்று ஏற்கனவே நிறைய உள்ளன. அவ்வரிசையில் கிரிக்கெட் இன்று வலிமையானதாக ஆகியுள்ளது.

சிமா இதழ் கிடைத்தது. நன்றி-
சேவணன்

படிப்பகம்

www.padippakam.com

பிள்ளைகளை மட்டுமல்லாமல் பெற்றோர்களையும் கிரிக்கெட் ஆட்டிப் படைக்கிறது. தங்களது குழந்தைகளும் இது போல் உழைக்காமல் புகழும் பணமும் குவிக்க வேண்டும் எனறு நடுத்தர மற்றும் மேல்தட்டு வர்க்கப் பெற்றோர்களைச் சிந்திக்கத் தூண்டுகிறது.

தங்களது வரட்டுக் கௌரவத்திற்காக அந்தஸ்த்திற்காக வருங்காலத்தில் உழைக்காமல் பொருளீட் வேண்டும் என்பதற்காக எவ்வாறு சிறு குழந்தைகளை புத்தக மூட்டைகளைச் சுமக்க வைத்து அவைகளிடம் இருந்து திறமைகளை பிதுக்கி எடுப்பதற்காக கசக்கிப் பிழியும் புகழ வெறியும் அதற்காக எதையும் செய்யும் விபச்சார சிந்தனையும் இன்று கிரிக்கெட் விசயத்திலும் பெற்றோரிடத்தில் செயலாற்றுகிறது.

"டெண்டுல்கரைப் பெற்றவள் புண்ணியவதி" என்று ஏக்கத்துடனும், "பெற்றால் இது போல் புள்ளை பெற வேண்டும்" என்று சபதமேற்றும் டி.வி முன்பாக அமர்ந்துள்ள குடும்பத் தலைவிகள்(?!) கூறும் அளவிற்கு ஆட்ட நாயகர்கள் (Man of the Match) பணத்தாலும் புகழாலும் போற்றப் படுகிறார்கள். இதனைத் தொலைக்காட்சிகளும் கண் குளிர படம் பிடித்துக் காட்டி சீரழிக்கின்றன.

இன்றைய இந்திய சமூக அமைப்பில் வளர்க்கப் படுகின்ற தனிநபர் துதிபாடலானது அதன் எதிர்மறையில் மக்களை கேவலப்படுத்துவதாகவும் மக்களது பாத்திரத்தை க்குறைத்து மதிப்பிட்டு வரலாற்று உருவாக்கத்தில் மக்களது பங்கை மறைத்து மக்களை செயலற்றவர்களாகவும் சுய சிந்தனையும் சுய விருப்பமும் அற்றவர்களாகவும் காட்டுகிறது.

கிரிக்கெட் ஆட்ட நாயகர்கள் உருவாக்கமும் இதைத்தான் செய்கிறது. இன்று கிரிக்கெட் போட்டிகள் நடத்துபவையாக உள்ளன. கோகோ-கோலா, பெப்சி, வில்ஸ், M.R.F. டயர்ஸ் போன்ற நிறுவனங்களே அதிகமாக நடத்துகின்றன.

இந்தப் போட்டிகளது மையமான நோக்கமே அனைத்து காலனிய, அரைக் காலனிய நாட்டு மக்களின் தேசிய உணர்வுகளை, பழக்க வழக்கங்களை, பண்பாட்டை, நுகர்வுத் தன்மையை தகர்த்து ஒரேமாதிரியான ஏகாதிபத்தியத்திற்குச் சேவை செய்யக் கூடிய தரகு உற்பத்தியுடன் இணைந்த உணர்வு மற்றும் நுகர்வுப் பண்பை வளர்ப்பதாகும்.

அதாவது அடிமைத்தனத்தை விரும்பியேற்கும் மனோபாவத்தையும் அதைப் பெருமையாக நினைக்கும் இழிநிலையையும் ஏகாதிபத்திய உற்பத்திப்

படிப்பகம்

www.padippakam.com

கூடவே இந்தியா போன்ற சனநாயகமற்ற அரைக் காலனிய நாட்டில் மக்களது சுய சிந்தனையை, சுய செயல்பாட்டை மழுங்கடிப்பதற்கான வகையில் மக்களது விருப்பங்களைத் தீர்மானிக்கும் சூப்பர் மேன்களாக ஆட்ட நாயகர்களை உருவாக்குகிறது. இந்த அடிப்படையிலேயே அஸார்களும், டெண்டுல்கர்களும் உருவாக்கப் படுகிறார்கள்.

கவாஸ்கர், கபில்தேவ், அஸார், டெண்டுல்கர் என்று இந்தப் பட்டியல் காலங்காலமாக தொடர்ந்து வருவது ஏகாதிபத்தியத்தரகு ஊீற்பத்திப் பொருட்களை ஏற்று வாங்கி உபயோகிப்பது பெருமைக்குரியது என்று நமது சிந்தனையைக் கட்டமைக்க உதவுகிறது. இதற்காகவே இந்த மேட்ச்களை நடத்தி " man of the match" எல்லோருக்கும் மேலான ஆட்ட நாயகர்களை உருவாக்குகிறார்கள். இந்த நாயகர்கள் கோகோ-கோலா, பெப்சி, M.R.F. என்று தங்களது மட்டைகளிலும், மார்பிலும், முதுகிலும் ஒட்டிக் கொண்டு ஸடேடியங்களில் கோமாளித்தனங்கள் புரிகிறார்கள்.

இந்தக் கோமாளிகள் புரியும் மாமாத்தனத்திற்கு சன்மானங்கள் கார்களாகவும் பணமாகவும் வீட்டு மனைகளாகவும் தனியாராலும் அரசாலும் வழங்கப் படுகிறது. இவை எல்லாவற்றையும் விட முக்கியமானதும் ஆபத்துமான ஓர் செயலையும் இங்கு கிரிக்கெட் வளர்க்கிறது.

கிரிக்கெட் போட்டிகளில் பங்கெடுக்கும் நாடுகளுக்கிடையில் குறிப்பாக இலங்கை-இந்தியா-பாகிஸ்தான் போன்ற அண்டை நாடுகளுக்கிடையில் போட்டி நடைபெறும் போது இன்றைய குறிப்பான சூழலில் ஆட்சியாளர்கள் மேற்கொள்ளும் போர் அபாயம் குறித்த அச்சுறுத்தல்களுக்குகு துணையாக அண்டை நாடுகளின் மீது பகைமை உணர்வையும், இந்துத்துவ இந்தியா வெல்ல வேண்டும் என்ற வெறியையும் சிந்தனையில் கட்டமைக்கிறது.

அதாவது இந்தியாவில் உள்ள பல்வேறு தேசிய இனங்களுக்கும் (இந்துத்துவ) இந்தியா என்ற கட்டமைப்பிற்கும் இடையிலான முரண்பாட்டின் காரணமாக எழுகின்ற சனநாயக போராட்ட உணர்வை மழுங்கடித்து இந்தியா என்ற உருவகத்தின் மீதான வெறித்தனமான பற்றை வளர்க்கிறது.

இன்றைய குறிப்பான சூழலின் காரணமாக மட்டுமல்லாமல் மக்களின் சனநாயக உணர்வின் வளர்ச்சிக்கு பாதகமானது என்ற அடிப்படையிலும் ஏகாதிபத்திய தரகு மனப்பான்மையை சமுகமயமாக்கி வளர்க்கிறது என்ற அடிப்படையிலும், மக்களின் பாத்திரத்தைக் குறைத்து மக்களை கேவலப்படுத்தும் ஒரு குறியீடு என்ற வகையிலும் கிரிக்கெட் எனும் சமுக விரோதச் செயலை எதிர்த்து பிரச்சாரத்தையும் போராட்டத்தையும் மேற்கொள்வது அனைத்து சனநாயக சக்திகளின் கடமையாகும்.

படிப்பகம்

www.padippakam.com

# ஒரு திருப்புமுனை

ஒவ்வொரு கலைஞனும் போராளி
ஒவ்வொரு கலையும் போராட்டக் கருவி.

ஒரு கலை இலக்கிய இதழாக. . .

பல்வேறு பகுதிகளிலிருந்தும், பல தோழர்களிடமிருந்தும் வரும் கருத்தியல் ஆதரவுடன், இலக்கியத்தை ஒரு போராட்டக்கருவியாக செயல்படுத்தும் சமூக விஞ்ஞானப் பயிலகத்தின் கலை இலக்கிய இதழாக புதிய தடம் இனி தொடர்ந்து வெளிவரும்.

இந்திய நிலவுடைமைத் தரகு ஆதிக்கச் சக்திகள் இச்சமூகத்தில் ஏற்படுத்தியுள்ள பல்வேறு வடிவங்களிலான மக்களுக்கு எதிரான கருத்தியல்களை அம்பலப்படுத்தி அதற்கு எதிராக மக்களை பயிற்றுவிக்கும் ஏடாக கருத்துப் பகிர்வு எனும் தத்துவ அரசியல் இதழை வெளியிட்டு சமூக விஞ்ஞானப் பயிலகம் மார்க்ஸிய வழியில் சமூகத்தைப் பயிலுவதையும் பயிற்றுவிப்பதையும் கடமையாகக் கொண்டு இயங்கி வருகிறது.

இந்தியச் சமூகத்தில் நாம் படக்கூடிய அவமானம், ஒடுக்குமுறை, அடிமைச்சூட்டின் ரணங்கள் வேதனை நம் கண் முன்னே நடக்கும் வன்கொடுமைகள் இவற்றைப் பொறுக்க முடியாமல் குரலெழுப்புகிற போது கொதித்தெழுகிற போது இந்திய நிலவுடைமைத் தரகு ஆதிக்கங்கள் இரண்டு விதமான ஒடுக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுகின்றன.

1. அரசின் அடக்குமுறைக் கருவிகளைப் பயன் படுத்தித் தாக்குவது
2. கலை இலக்கியத்தையும் கலாசாரத்தையும் பயன் படுத்தி நம் முதுகில் குத்துவது.

இதில் கலாச்சார அம்சங்களைப் பயன்படுத்தி மக்களைச் சீரழிப்பது அபாயகரமான விஷயம். ஏனெனில் இது மக்களை சிந்தனை ரீதியில் அடிமையாக்கக் கூடியதும் ஆளும் வர்க்கம் ஏற்படுத்தும் கருத்தியல் பரிமாணங்களுக்கு தலையசைத்துச் செல்லும்படியானதுமான மனப் போக்கினை உருவாக்குகிறது.

படிப்பகம்

www.padippakam.com

மறுபுறம் மக்களுக்காக நிற்பதாகச் சொல்லிக் கொள்ளும் திரிபுவாதிகள் மக்களது சுய சிந்தனையை அழித்து தாங்கள் ஏவும் வேலைகளைச் செய்பவர்களாக மக்களை மாற்ற கலை இலக்கியத்தைப் பயன் படுத்தி வருகிறார்கள்.

இத்தகைய சமூக விரோதச் செயல்களுக்கு எதிராக மக்கள் சமூகத்தை விஞ்ஞான அடிப்படையில் பரிசீலிக்கவும் பயிலவும் சுயமான முடிவுக்கு வரவும் தடையாக இருப்பனவற்றை எதிர்த்து கலை இலக்கிய வடிவில் போராட புதிய தடம் சபதம் ஏற்கிறது.

இதில் தங்களையும் இணைத்துக் கொண்டு செயலாற்ற வரும் படி அனைத்து சனநாயக வாதிகளையும் சமூக விஞ்ஞானப் பயிலகம் அறைகூவி அழைக்கிறது.

வாருங்கள் தோழர்களே

பயிலுவோம் பயிற்றுவிப்போம், தடையுடைத்து வளர்த்தும் வளர்ந்தும் செல்வோம்.

தோழமையுடன்

புதிய தடம்<br>
சமூக விஞ்ஞானப் பயிலகம்<br>
தமிழ்நாடு.

---

கவிதை — பாட்டாளி.

## அங்கிங்கெனாத படி....

வண்டு துளை போட்ட<br>
மூங்கிலுக்குள் நுழைந்து<br>
சீழ்க்கை அடித்தது<br>
காற்று.

துகள் துகளாய்<br>
சேகரித்து சேகரித்து<br>
கரையான் வீடு கட்ட<br>
சுலபமாய்<br>
குடி புகுந்தது பாம்பு.

ஒன்றின் பலனை<br>
மற்றொன்று<br>
அபகரித்து அனுபவித்தலாய்<br>
தொடர<br>
தூரத்தில் நடக்கிறது<br>
நாற்று நடவு.

படிப்பகம்

www.padippakam.com

# இந்துச் சரஸ்வதியும், சாதித் தமிழ்த் தாயும் மக்கள் விரோதிகளே

இந்திய கல்வி அமைச்சரும், தமிழக அறநிலையத்துறை அமைச்சரும் சமீப நாட்களில் ஏற்படுத்திய பரபரப்பை நாம் அறிவோம்.

முதலாமவர் மாநில் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் சாஸவதி வந்தனம் பாடச் சொல்லி மதசார்பின்மை (?!) வாதிகளது எதிர்ப்பைச் சந்தித்தார். மற்றவர் தமிழகத்து (இந்து) ஆலயங்களில் தமிழில் தான் அர்ச்சனை செய் வேண்டும் என்றுரைத்து சனாதன மரபாளர்களின் எதிர்ப்பைச் சந்தித்துள்ளார்.

சரஸவதி வந்தன எதிர்ப்பாளர்கள் சொல்லும் காரணம் பி.ஜே.பி இந்துத்துவத்தை கல்வித்துறையில் புகுத்த முயற்சிக்கிறது என்பதாகும். இது இந்திய புனித மதச்சார்பின்மைப் பாரம்பரியத்திற்கு நிகழுந்த களங்கம் என்றுரைக்கிறார்கள். இது போலவே தமிழ் அர்ச்சனை எதிர்பாளர்களும் சமஸ்கிருதம் தேவ பாஷை, கடவுளின் மொழி ஆண்டாண்டு கால மரபு மீறப்படக் கூடாது என்று காரணம் கூறுகிறார்கள்.

மரபு காக்கப் பட வேண்டும் என்ற பெயரால் இங்கு இருவித மாறுதல்கள் மறுக்கப்படுகின்றன. முதல் மரபை காப்பவர்கள் இரண்டாவது மீறலை அங்கீகரிக்கிறார்கள். மரபை மீறுபவர்கள் மறுபுறம் இன்னொரு மரபை மீறக் கூடாது என்கிறார்கள்.

இதனைக் காணும் போது இருவரும் எதிர் எதிர் சக்திகள் என்று ஒரு தோற்றம் ஏற்படுகிறது. அது உண்மையா ?.

இருவருமே ஒரு புனித மரபை காக்கின்றவர்களாகவும் மற்ற புதிய மரபை உடைப்பவர்களாகவும் இருக்கிறார்கள். அதே சமயம் இவர்கள் ஒன்றை உடைத்து மாற்றாக வைக்கும் மீறல் எத்தகையது ? புனிதத்திற்கு எதிராக இவர்கள் வைப்பது எதனை? விஞ்ஞானத்தையா? இல்லை.

1. சரஸ்வதி வந்தனம்:-

இன்று நிலவும் கல்வி பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு சேவை செய்யும் தரகர்களது நலனை கட்டிக்காப்பதற்கான அறிவாளி என்று சொல்லப்படும் அடிமைகளைத் தயார் செய்வதாக இருக்கிறது என்பது நாம் அறிந்ததே.

இக்கல்வி பிற்போக்கு மதவாத கருத்துக்களை சாதியத்தை உள்ளக்கமாகக் கொண்டிருந்தாலும் விஞ்ஞான அங்கியை அணிந்து சனநாயக வேடம் போடுகிறது.இதனை அப்பட்டமான இந்துத்துவ மயமான சனாதனக் கல்வியாக மாற்ற வேண்டும். அப்போது தான் இந்திய சுதேசி நலன் காக்கப்படும் என்று பி. ஜே. பி

www.padippakam.com
சொல்கிறது. இந்த சுதேசிக் கல்வியாக மாற்றும் நடவடிக்கை(?!)யின் ஓர் அம்சம் தான் சரஸ்வதி வந்தனம் பாடச் சொல்லப் பட்டது.

இவர்கள் உண்மையில் ஏகாதிபத்திய எதிப்பாளர்களா? சுதேசிய சக்திகளா? இல்லை. இவர்கள் சுதேசிப் பொருளாதாரம் என்ற பெயரால் பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு தரகு வேலை செய்ய காங்கிரஸ், ஐக்கிய முன்னனி அரசு கடந்த காலங்களில் நடைமுறைப் படுத்தி வந்த அதே புதிய பொருளாதாரக் கொள்கையை இன்னும் தீவிரமாக நடத்தி வருகிறார்கள்.

இவர்கள் தான் இன்று சுதேசிக் கலிவி பற்றிச் சொல்கிறார்கள். இவாகள் இன்றைய புணரமைப்பை மறுத்து பழைய சனாதன காலத்திற்கு செல்ல வேண்டும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அது சாத்தியமில்லாததால் பழைய சனாதன வடிவத்தில் புதிய பொருளாதார புதிய கல்விக் கொள்கையை செயல் படுத்தி இறைய ஆளும் தரகு நிலப் பிரபுத்துவ நலனைக் காக்கும் வேலையைச் செய்கிறார்கள்.

மதச்சார்பின்மை வாதிகளும் மதவாதிகளும் உள்ளடக்கத்தில் ஒரே வேலையைச் செய்கிறார்கள். ஆனால் போட்டுள்ள வேஷங்களை காரணம் காட்டி தங்களை எதிர் எதிரானவர்களாக நிறுத்தி நிழல் சண்டையிடுகிறார்கள்.

2. தமிழ் அர்ச்சனை:-

இங்கும் அதே தான். சமஸ்கிருதத்தை மறுத்து தமிழ் அர்ச்சமையை வலியுறுத்துபவர்கள் கூறும் நியாயங்கள் என்ன?

சமஸ்கிருதம் இங்கு வருவதற்கு முன் நாங்கள் திருவாசகத்தையும், தேவாரத்தையும், திவ்விய பிரபந்தத்தையும் பண்டார சன்னிதிகளைக் கொண்டு பாடித் தானே பூசைகள் செய்வித்தோம்.மீண்டும் அதனைச் செய்வோம்.

சமஸ்கிருதம் மட்டுமல்ல எங்கள் கடவுளுக்கு தமிழும் புரியும் என்று புலமைத் தமிழில் அர்ச்சனையை முன் வைக்கிறார்கள். இங்கும் ஒன்று கவனிக்கத் தக்கது. நிலவும் மரபை மீறுபவர்கள் அதாவது இடைக்கால மரபை மீறுபவர்கள் வைக்கும் மாற்று என்னவென்றால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய வழிபாட்டு முறையாக இருக்கிறது.

இங்கும் உள்ளடக்கம் கவனிக்கப் பட வேண்டும். இவர்கள் கூறும் பண்டார சன்னிதி காலமும் அதே சனாதன இந்துத்துவ சாதிய ஆதிக்கமன்றி வேறென்ன?

இங்கு செயற்பணடம் முரண்பாடு பிராமணருக்கும் பிற உயர்சாதி இந்துக்களுக்கும் இடையிலான ஆதிக்கப் போட்டிக்கானதேயன்றி இந்துத்துவத்திற்கும் அதற்கு எதிரான சனநாயத்திற்குமானதல்ல.தேவாரமும்,

படிப்பகம்

திருவாசகமும்,திவ்விய பிரபந்தங்களும் யாருக்கானது? தமிழ் தமிழர்கள் என்ற பெயரால் யாருடைய நலனை முன் வைக்கிறார்கள்.

www.padippakam.com

- தமிழ் நிலப்பிரபுக்களுடைய தரகுச் சக்திகளுடைய நலனைத்தானே? இங்கு மொழியை முன்னிறுத்தி நிகழும் சண்டையும் இந்திய அளவிலான நிலப்பிரபுத்துவ தரகுச் சக்திகளுக்குண்டான பொருளாதார அரசியல் நலனில் பங்கு பெறுவதற்கான மாநிலத் தரகர்களின் போட்டி தானே?

தமிடிழகத்தில் தரகுப் பொருளாதாரத்தை கட்டிக் காத்தும் ஏகாதிபத்திய சேவை செய்தும் ஆங்கிலத்தை சமூக மயமாக்கியும் வரும் இவர்களா தமிழை வளர்ப்பவர்கள் ? தமிழ் வளர்ப்பு என்ற பெயரால் இவர்கள் முன வைப்பது மன்னராட்சிக் கால தமிழ் அல்லவா ?

இப்போது கவனியுங்கள். இரு வேறு அரங்குகளிலும் மாறுதலைக் கோருபவர்கள் முன் வைக்கும் மாற்றங்கள் வரலாற்றை பின்னுக்கு இழுத்துச் செல்லும் சனாதன விருப்பங்களா இல்லையா ?

இன்றைய நிலவும் கல்வியும், இறைவழிபாடும் மக்களுக்கு எதிரானதும் பிரபுத்துவ பன்னாட்டு நிறுவனச் சேவை புரியும் அடிமை உருவாக்கத்தைச் செய்யும் கல்வி தகர்க்கப்பட்டு சுய சிந்தனையைத் தூண்டும், இருப்பதிலிருந்து சுயமான தொழில் நுட்பத்தை, பொருளாதாரத்தை வளர்க்கும் விதத்திலான சனநாயகக் கல்வி முறையே இன்றைய தேவையாகும்.

அத்தகைய கல்வியை அனைதது தேசிய இனங்களின் தாய் மொழியில் பயிற்றுவிக்க வேண்டும். தாய்மொழி எனும் போது நிலப்பிரபுத்துவத்தால் கறை பட்டுப் போன அறிவாளிகளது மொழியில் அல்ல. உழைக்கும் மக்கள் மொழியில் பயிற்றுவிக்க வேண்டும்.

தமிழகக் கோயில்களில் வழிபாடு என்பதும் உழைக்கும் மக்களுக்குப் புரியாத திருவாசகம், தேவாரம் போன்ற புலமைத் தமிழில் அல்ல. புலமைத் தமிழ் என்பதும் சமஸ்கிருதம் என்பதும் உழைக்கும் மக்களைப் பொருத்த வரை புரியாததே. இரண்டுமே இறைவனுக்கும் மக்களுக்கும் இடையில் தரகர்களை (பூசாரிகளை) உருவாக்குதே. இன்று வந்துள்ள போட்டி இடைநிலையாளராக சமஸ்கிருதப் பார்ப்பனர் இருப்பதா? புலமைப் பண்டாரங்கள் இருப்பதா? இப்போட்டி சனாதனச் சாதியக் கட்டமைப்பிற்குள் நடைபெறுகிறதே ஒழிய சாதியை ஒழிக்கும் - இந்துத்துவத்தை ஒழிக்கும் செயற்பாடுகளை நோக்கி வளர்த்துச் செல்பவையாக இல்லை. மாறாக நிலப்பிரபுத்துவ சாதிய சனாதனத்தைக் காக்கின்றவைகளேயாகும்.

உழைக்கும் மக்கள் தமிழ் வழிபாடு என்பது பூசாரிகளை

மறுப்பதால் இந்துத்துவ சாதியத்தை உடைத்து காலப் போக்கில் கடவுள் மறுப்பு வரை கொண்டு செல்லக் கூடியதாகும்.

www.padippakam.com

எனவே பல்வேறு வேடங்களிட்டு கடவுள், மொழியின் பெயரால் நிழல் சண்டை போடும் இவர்கள் செய்வது எல்லாம் தங்களது தரகுப் பொருளாதார நலனை காக்கும் வேலையை மறைத்து மக்களை தங்களது பக்கம் திரட்டி ஒட்டு வங்கிகளாக மாற்றும் தந்திரமேயன்றி வேறில்லை. இதனைப் புரிந்து கொண்டு நிலவும் யதார்த்தத்திற்கு எதிரான உண்மையான சனநாயக மாற்றுகளை முன்னிறுத்திப் போராடுவதே இன்றைய தேவையாகும்.

## கடிதங்கள்

புதிய தடம் இதழ் எண் 2 'கவிக் காவிரி' திருவை குமரன் வழி பெற்றேன். படித்தேன். பெண்களின் நிலையும் போராட்டமும் கட்டுரை செரிவானது. இதழ் எண் 1 தேவை. அனுப்புக.

அரசெழிலன். திருச்சி

உங்களது வெளியீடான 'புதிய தடம்' படித்தேன். தலையங்கம் சிறப்பாக இருந்தது. "கடலில் மூழ்கும் தொழில்" -அருமையான கட்டுரை.மீனவர்களின் பிரச்சனைகளையும், போராட்டங்களையும் கண்டு வந்த எங்களுக்கு பிரச்சனையின் ஆணிவேர் எதுவென அக்கட்டுரை விளக்கியது. சரிகாஷா, பெண்களின் நிலையும் போராட்டமும் ஆகிய கட்டுரைகள் பாமர வாசகனாகிய என்னைக் குழப்புகிறது. சொல்வதை தெளிவாக, நேரடியாக, எளிதாகச் சொல்லுங்கள். உங்கள் முயற்சிக்கு வாழ்த்துக்கள்.

R.S.M. ஹமீது. இராமேஸ்வரம்.

அற்புதமான அட்டைப் படம்.ஆதிக்கத்தின் கூரிய நகங்கள், கை வளை உடைந்து சிதறல் . . . கோட்டோவியத்தை வரைந்தவர் யார்? படைப்பாளியை அறிமுகப்படுத்தியிருக்க வேண்டும் நீங்கள். குறைந்த பட்சம் அவரின் பெயரைப் போட்டாவது.

பொன் விழாப் பூச்சாண்டிகள் - புரிதலான தலையங்கம். சரியான ரீதியில் அணுகியிருக்கிறீர்கள். வாழ்த்துக்கள். ஆனால் அதே சமயம் வேறொன்றையும் நினைவுக்கு, கவனத்திற்கு கொண்டு வர வேண்டியிருக்கிறது. மே தின வென்றெடுப்பின் பின் புலம் வேறு. இந்தியப் பின் புலம் வேறு. இந்த வரலாற்றுச் சூழல் குறித்த பார்வையோடும் அணுகியிருந்தால் பிரச்சனை இன்னும்

படிப்பகம்

பற்றிய கட்டுரை சிறியதுதான் என்றாலும் பல்வேறு முகங்களையும், மூலதங்களைவும் உள்ளடக்கிய கேப்ஸ்யூல் மாதிரி. குறுகத் தரித்த கட்டுரை என்றாலும் கூர்மை செறிந்த கட்டுரை.

www.padippakam.com

பெண்களின் நிலையும் போராட்டமும் என்ற நீதாவின் கட்டுரை நல்ல ஆற்றலான கட்டுரை.

கவிதைகளில் வாசிக்கக் கிடைத்த கவிதையும், தீபனும், மேகவண்ணனும் நன்கு இயங்கியிருக்கிறார்கள் என்றாலும் மேகவண்ணனுக்கு ஒரு வார்த்தை. படைப்பாளி தனக்கு நேர்ந்த அனுபவத்தை படைப்பாக உருவாக்குகிறான் என்றாலும் இந்தத் தனி மனித அனுபவம் எப்படி பொதுவானதாக, எல்லோருக்குமான அனுபவமாக மாறுகிறது. அந்த ரசவாதம் படைப்பின் தாத்பரியம். ஆனால் தனக்கு நேர்ந்த பிரதேசக் காட்சியை, அனுபவத்தை மேகவண்ணன் தன்னிலையிலிருந்து உருமாற்றி பொதுவனுபவமாக மாற்றாததால் கவிதை தன்னிலையனுபவத்தோடு மட்டுமே நின்றுவிடுகிறது. அப்புறம் வீரம் பற்றிய சொல்லாடல்களில் மார்பில் தாங்குவது முதுகில் குத்துவது என்ற வீரம், கற்பு போன்ற நிலவுடமைச் சிந்தனையில் சொல்லாடல்களிலேயே கட்டமைக்கிறார். இன்னும் அதுமாதிரியான கற்பிதங்களிலிருந்து மீளவில்லை போலிருக்கிறது கவிஞர்.

கலியுகனின் கட்டுரை நிறைய விஷயங்களைச் சொன்னது. தோழர் கோ. கேசவனுக்கு செவ்வணக்கம் சொன்ன புதிய தடம் தோழர் நாகபூஷன் பட்தாயக்கிற்கு செவ்வணக்கம் சொல்லத் தவறி விட்டதே. வரும் இதழிலாவது இதை நேர் செய்யட்டும் புதிய தடம். வாழ்த்துக்கள்.

பாட்டாளி. திருச்சி.

புதிய தடம் கிடைத்தது. பெண்ணியக் கொடுமையை அட்டையில் அழகாகச் சித்தரித்துள்ளீர்கள். ஒரு கட்டுரைக்கும் மேலான செய்தியை அட்டைப்படத்தின் வழி சொல்ல வைத்தது பாராட்டுக்குரியது. சிந்தனைக்கு என நீதாவின் கட்டுரை சரியாக அலசப் பட்டுள்ளது. பாலியல் வக்கிரத்திற்கு மக்கள் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் உடந்தையாக இருக்கின்றது. குமரியில் ரப்பர் தொழில் பாதிப்பு போல இராமேஸ்வரம் மீன் தொழில் பாதிப்பு. மாநிலம் முழுவதும் இதுபோல் முடக்கப்பட்டு வருகின்றன. தீபனின் கவிதை வழக்கம் போல் பாதிப்பைத் தந்தது.

தி.மா.சரவணன் திருச்சி.

நீங்கள் அனுப்பிய சில பிரதி கிடைத்தது.
தொடர்ந்து அனுப்புங்கள். புதிய தடத்தை பாரிஸ்
தமிழர்களுக்கும் அறிமுகம் செய்யுங்கள்.
தோழமையுடன் மேகவண்ணன்

படிப்பகம்

www.padippakam.com

புதிய தடம் 2 வாசித்தேன். அட்டைப்படமும் அச்சுக் கோர்வையும் நன்று. பெண்களின் நிலையும், போராட்டமும் நீதா எழுதிய கட்டுரை பெண்களை சதைப்பிண்டமாக நினைத்திருக்கும் தரகு முதலாளித்துவத்தை எதிர்த்து சரியான முறையில் பெண்களின் உரிமைக்காக போராட்டத்தைக் கட்டமைக்கும் வகையில் அமைந்தது. கலியுகனின் கட்டுரை மீனவர்களின் உண்மை நிலையை தெள்ளத் தெளிவாக உணர்த்தியது. வாசிக்கக் கிடைத்த மல்லன் கவிதை உறங்கும் நினைவுகளைத் தட்டியெழுப்பியது. புதிய தடம் பயணம் தொடர வாழ்த்துக்கள்.

வித்தகன். இராமேஸ்வரம்.

புதிய தடம் கிடைத்தது. மகிழ்ச்சி.
முதல் இதழைவிட கூடுதலான தெளிவுடன் கட்டுரைகள். கவிதைகளில் மு.மல்லனின் கடைசி வரிகளைப் புரிந்து கொள்வதில் சிரமமிருக்கிறது. மேகவண்ணன் படைப்பில் உள்ள ஆதங்கம் வாசகனை நேரடியாய அடைகிறது-சிறப்பு. அவர்களை இன்னும் குறிப்பாகக் கூட அடையாளப் படுத்தியிருக்கலாம்.
மற்றபடி தீவுச்செய்தி தொடர்ந்து வெளியிடுங்கள். மீனவர், கடல் சார்ந்த மனிதர்களின் பிரச்சனை வெளி அரங்கிற்கு மிகச் சரியாய் இதுவரை அறிமுகமாகவில்லை.
உங்கள் பணி தொய்வின்றி முன்னேறட்டும்.

தீபன். ஆற்காடு.

புதிய தடம் இதழ் 2 கண்டேன். சமூகத்தில் பெண்ணிற்கு விதிக்கப்படும் கொடுமைகளை அட்டைப் படம் விவரித்தது - நன்று. கலியுகனின் கடலில் மூழ்கும் தொழில் கட்டுரையின் மூலம் மீனவர்களுக்கான தீர்வையும் கூறிய விதம் அருமை. பெண்களின் விடுதலைக்காக குரல் எழுப்பிய குமரன்தாஸ், நீதாவுக்கும் என் பாராட்டுக்கள். இதழ் மேலும் சிறக்க என் வாழத்துக்கள்.

இளையவன். இராமேஸ்வரம்.

படிப்பகம்

www.padippakam.com

தங்களது
கருத்துக்கள்
விமர்சனங்கள்
கட்டுரைகள்
கவிதைகள்
வரவேற்கப்படுகின்றன.


**புதிய தடம்**

பிப்ரவரி முதல்
வெளிவருகிறது,
சமூக விஞ்ஞான
பயிலகத்தின் தத்துவ
அரசியல் இதழ்
**பகிர்வு.**


"புதிய தடம்"
மேகவண்ணன்
28B, லெட்சுமண தீர்த்தம் தெரு,
இராமேஸ்வரம் - 623 526.


சேரல்: SAMAR
87, RUE DE COLOMBES
92600. ASNIERES SUR SEINE
FRANCE

PRINTED MATTER
BY AIR MAIL



படிப்பகம்